| O.S.No. 56/2025 | PW1: திரு. சஞ்சீவ் ஜெயபிரகாஷ்<br>த/பெ. திரு. ஜான் பென்னட் | 05-08-2025 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் M.A., B.Ed., படித்துள்ளேன். இன்சூரன்ஸில் வேலை செய்கிறேன். எனக்கு பிரதிவாதி முனியனை 10 வருடங்களுக்கு மேலாக தெரியும். பிரதிவாதி முனியன் ஏற்கனவே என்னிடம் கடன் வாங்கியுள்ளார் என்றால் இல்லை. ஸ்டாலின் என்பவர் எனக்கு உறவினர். ஸ்டாலினிடம் பிரதிவாதி ஏற்கனவே கடன் வாங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா பாண்டினை நான்தான் எழுதினேன் என்றால் நான் எழுதவில்லை, பிறகு சாட்சியானவர் நான்தான் தாவா பாண்டினை எழுதினேன் என்று சாட்சியம் அளிக்கிறார்.

2. தாவா பாண்டில் சாட்சியாக தமிழ்ச்செல்வி, சதீஷ் ஆகிய இருவர் சாட்சி கையெழுத்து போட்டார்கள். தமிழ்ச்செல்வி எனக்கு உறவினர் இல்லை. தமிழ்ச்செல்வியை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர் உள்ளூர் என்பதால் எனக்கு அறிமுகமானவர். சாட்சி சதீஷும் எனக்கு உள்ளூர் என்பதால் நன்கு அறிமுகமானவர். தாவா பாண்டு சம்மந்தமாக பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். நோட்டீஸ் அனுப்பியதற்கு பிறகு பிரதிவாதி எங்களது தரப்பினரை வந்து பார்த்து ஏன் நோட்டீஸ் அனுப்பினீர்கள் என்று கேட்டார் என்றால் அவ்வாறு அவர் பார்க்கவும் இல்லை, கேட்கவும் இல்லை. நான் நோட்டீஸ் அனுப்பியதற்கு பிறகு பிரதிவாதி எங்கள் தரப்பினரை வந்து பார்த்து கேட்டார் என்றாலும், நான் வழக்கிற்காக இல்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் இதற்கு முன்பாக எந்த பாண்டினையும் எழுதவில்லை. நான் தாவா பாண்டினைத்தான் முதன்முதலில் எழுதினேன்.

3. பொதுவாக பாண்டு எழுதும்போது பணம் கொடுப்பவர் பெயர் முதலிலும், பணம் வாங்குபவர் பெயர் அடுத்ததாகவும் எழுத வேண்டும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி தாவா தொகையை செய்யாரில் உள்ள எனது வீட்டில் வந்து வாங்கினார். சாட்சிகள் கடன் வாங்கியதற்கு பிறகு கையெழுத்து போட்டார்களா என்றால் கடன் வாங்கிக்கொண்டு பிரதிவாதியின் முன்னிலையில் சாட்சி கையெழுத்து போட்டார்கள்.

4. தீர்ப்பிற்கு முன் பற்றுகை செய்ய வேண்டி தாக்கல் செய்துள்ள மனுவில் கண்டுள்ள சொத்தினை நான்தான் வைத்திருந்தேன் என்றால் இல்லை. அந்த சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. அச்சொத்தினை நான்தான் வைத்திருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. தீர்ப்பிற்கு முன் பற்றுகை செய்யப்பட்ட சொத்துக்கள் விண்ணவாடி கிராமத்தில் உள்ளது. மேற்படி சொத்துக்கள் பிரதிவாதியின் பெயரில்தான் உள்ளது. அந்த சொத்துக்களை பிரதிவாதி யாரிடம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது.

5. மேற்படி சொத்தினை நான்தான் முதலில் அனுபவித்து வந்தேன் என்றாலும், அதன் பிறகு ஸ்டாலினுக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றாலும், பின்னர் பிரதிவாதிக்கு அச்சொத்தினை கிரைய பதிவு செய்து கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. சொத்தினை பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்ட பிறகு மோசடியான பாண்டினை உருவாக்கி வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா பாண்டினை மோசடியாக உருவாக்கி வழக்கு தாக்கல் செய்து பிரதிவாதிக்கு எதிராக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

6. பிரதிவாதி எந்த காலத்திலும் என்னிடம் கடன் ஏதும் வாங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பாண்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியின் கையெழுத்துதான் என்பதனை நிரூபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க தயாராக உள்ளீர்களா என்றால் தயாராக உள்ளேன், சாட்சியானவர் மீண்டும் நான் எதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொல்கிறார்.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2025.08.05 12:57:03 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**